**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 172/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரவீன் செபாஸ்டியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தாமஸ்** | **Calling** | : | **நாக டிடர்ஜெண்டில் மிஷின் ஆப்பரேட்டர்** |
| **Village** | : | **முத்தழகுபட்டி** | **Religion** | : | **கிறிஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **26** |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 4, 5, 6 ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளுக்காக அவர்களுடைய வழக்கறிஞர்கள் ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 4), **திரு. பிரவீன் செபாஸ்டியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து **நாக டிடர்ஜெண்டில் மிஷின் ஆப்பரேட்டராக** வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் எனக்குத் தெரியாது. 2016ம் ஆண்டு வழக்கு ஒன்றிற்கு என்னை சாட்சியாக

சேர்த்து இருப்பதாக சொன்னார்கள். அதற்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று சொன்னார்கள், அதற்காக வந்தேன். நான் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தபோது, கப்பல் மாதா கோவில் அருகே மாடு கட்டி வியாபாரம் செய்வது வழக்கம். அங்கு வேலை பார்த்தபோது என் பெயரை யாரோ கொடுத்துவிட்டார்கள். இந்த வழக்கு விசயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 05.08.2016ம் தேதி காலை 03.00 மணிக்கு திண்டுக்கல், முத்தழகுபட்டி, கப்பல் மாதா கோவில் எதிரே உள்ள கல்லறைத் தோட்டத்தின் அருகே நானும், கருப்பையா மகன் நீலமேகம் வந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் ஒன்றாக சேர்ந்து பெரிய பணக்கார வீட்டை கொள்ளையடித்து, அதில் வரும் பணம், பொருட்களை வைத்து, வெளியூர் சென்று தப்பிவிட வேண்டும் என்று, கொள்ளையடிக்க பயம்படுத்தும் ஆயுதங்களை மறைத்து வைத்து கூட்டுக் கொள்ளையடிக்க திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய போலீசார் வந்து, 1-5 எதிரிகளை சுற்றி வளைத்து பிடித்தார்கள் என்றும், 6-வது எதிரி ராமன் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், எதிரிகளை சந்தேகத்தின்பேரில் கைது செய்து காவல்நிலையம் கொண்டு போனர்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது

எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.12 17:20:34 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 172/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. நீலமேகம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கருப்பையா** | **Calling** | : | **சலூன் கடை** |
| **Village** | : | **முத்தழகுபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **63** |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 4, 5, 6 ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளுக்காக அவர்களுடைய வழக்கறிஞர்கள் ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 5), **திரு. நீலமேகம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் எனக்குத் தெரியாது. 2016ம் ஆண்டு வழக்கு ஒன்றிற்கு என்னை சாட்சியாக சேர்த்து இருப்பதாக சொன்னார்கள். அதற்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று சொன்னார்கள், அதற்காக வந்தேன். இந்த வழக்கு விசயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 05.08.2016ம் தேதி காலை 03.00 மணிக்கு திண்டுக்கல், முத்தழகுபட்டி, கப்பல் மாதா கோவில் எதிரே உள்ள கல்லறைத் தோட்டத்தின் அருகே நானும், பிரவீன் செபாஸ்டியனும் வந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் ஒன்றாக சேர்ந்து பெரிய பணக்கார வீட்டை கொள்ளையடித்து, அதில் வரும் பணம், பொருட்களை வைத்து, வெளியூர் சென்று தப்பிவிட வேண்டும் என்று, கொள்ளையடிக்க பயம்படுத்தும் ஆயுதங்களை மறைத்து வைத்து கூட்டுக் கொள்ளையடிக்க திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய போலீசார் வந்து, 1-5 எதிரிகளை சுற்றி வளைத்து பிடித்தார்கள் என்றும், 6-வது எதிரி ராமன் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், எதிரிகளை சந்தேகத்தின்பேரில் கைது செய்து காவல்நிலையம் கொண்டு போனர்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.12 17:20:42 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.